M

# காலாண்டு பொதுத் தேர்வு - 2017

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

*நேரம்: 2.30 மணி* *மதிப்பெண்கள்: 90*

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 20 x 1 = 20

1. முதல் கணக்கு இடம்பெறும் வகை _______.
   a) ஆள்சார் க/கு b) சொத்துக் க/கு c) இரண்டும் இல்லை
2. ஒவ்வொரு வணிக நடவடிக்கையும் எத்தனை தன்மைகளைக் கொண்டது?
   a) ஒன்று b) இரண்டு c) மூன்று
3. எடுப்புக் கணக்கு எந்த கணக்கு வகையைச் சார்ந்தது?
   a) சொத்துக் க/கு b) ஆள்சார் க/கு c) பெயரளவு க/கு
4. ஒரு நடவடிக்கையின் பெறுதல் தன்மை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
   a) பற்றுத்தன்மை b) வரவுத்தன்மை c) இரண்டும் இல்லை
5. சொத்துக்களிலிருந்து பொறுப்புக்களை கழித்தால் கிடைப்பது _______.
   a) எடுப்பு b) முதல் c) வரவு
6. நிறுவனம் பிறர்க்கு கொடுக்க வேண்டிய கடன்கள்
   a) பொறுப்பு b) செலவு c) கடனீந்தோர்
7. தனித்தன்மை அனுமானமானது நிறுவனத்தை இவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும்
   a) உரிமையாளர் b) வங்கியர் c) அரசு
8. குறிப்பிட்ட கணக்காண்டின் அடக்கவிலை வருவாயோடு ஒப்புநோக்குவது _______.
   a) பொருத்துகை கருத்து b) புராதன அடக்கவிலைக் கருத்து c) முழு வெளிப்பாட்டுக் கருத்து
9. அர்த்தசாஸ்திரா என்ற புகழ்வாய்ந்த புத்தகத்தை எழுதியவர் _______.
   a) கௌடில்யர் b) சாணக்கியர் c) மெகல்லன்
10. நடவடிக்கைகள் தோற்றம் பெறுவது _______.
    a) ஆதார ஆவணங்கள் b) குறிப்பேடு c) கணக்கியல் சமன்பாடு
11. கீழ்க்கண்டவற்றில் எது சரியானது? a) முதல் = சொத்துக்கள் + பொறுப்புக்கள்
    b) முதல் = சொத்துக்கள் - பொறுப்புக்கள் c) சொத்துக்கள் = பொறுப்புக்கள் - முதல்
12. நடப்பு ஆண்டில் ஆரம்பத்தில் பதியக்கூடிய பதிவு _______.
    a) தோற்றப்பதிவு b) இறுதிப்பதிவு c) தொடக்கப்பதிவு
13. ஒரு தொழிலின் பொறுப்புக்களின் மதிப்பு ரூ.30,000. அதன் உரிமையாளரின் முதல் ரூ.70,000 எனில் சொத்தின் மதிப்பு _______.
    a) ரூ.1,70,000 b) ரூ.1,00,000 c) ரூ.40,000
14. பேரேடு என்பது ஒரு _______.
    a) தோற்றப் பதிவேடு b) இறுதிப்பதிவேடு c) ரொக்க ஏடு
15. பெயரளவுக் கணக்கின் வரவு இருப்பு குறிப்பது _______.
    a) வருமானம்/ஆதாயம் b) செலவு/நட்டம் c) சொத்து
16. பற்று மொத்தமும், வரவு மொத்தமும் சமமாக இருந்தால் அது _______.
    a) பற்றிருப்பு b) வரவிருப்பு c) இருப்பின்மை
17. இரட்டைக் கணக்குப்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______.
    a) கி.பி. 1494 b) கி.பி. 1881 c) கி.பி. 1649
18. எந்திரம் வாங்கியது பதிவு செய்யப்படுவது _______
    a) விற்பனை ஏடு b) முறையான குறிப்பேடு c) கொள்முதல் ஏடு
19. கடன் விற்பனை பதியப்படுவது _______.
    a) விற்பனை ஏடு b) ரொக்க ஏடு c) முறையான குறிப்பேடு
20. சலுகை நாட்கள் என்பன _______.
    a) 6 நாட்கள் b) 3 நாட்கள் c) 5 நாட்கள்

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. கணக்கியல் தனித்தன்மை அனுமானம் என்றால் என்ன?
22. பின்வருபவை எந்த கணக்கைச் சார்ந்தது எனக்கூறுக.
    a) கொள்முதல் b) சம்பளம் c) ராமன் d) எடுப்பு
23. இரட்டை பதிவு முறை என்றால் என்ன?
24. சான்று சீட்டு என்றால் என்ன?
25. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
    a) ராமன் கொண்டு வந்த முதல் ரூ.50,000 b) ரொக்க விற்பனை ரூ.30,000
26. கீழ்க்காணும் கணக்கில் தோன்றும் இருப்புக்களைக் குறிப்பிடுக.
    a) கடனாளிகள் b) விற்பனை c) கணினி d) முதல்
27. கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எந்த துணையேட்டில் பதிய வேண்டும்?
    1) சங்கரிடம் சரக்கு கடனுக்கு வாங்கியது ரூ.40,000
    2) ராமனுக்கு அனுப்பிய தரமற்ற சரக்கு ரூ.3,000
28. கீழ்க்காணும் குறிப்பேட்டுப் பதிவை திருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1) அறைகலன் க/கு | ப. | 80,000 | |
| ரொக்க க/கு | | | 80,000 |
| (ரொக்கக் கொள்முதலுக்காக) | | | |
| 2) சங்கர் க/கு | ப. | 6,000 | |
| ரொக்க க/கு | | | 6,000 |
| (சங்கரிடம் இருந்து பெற்ற ரொக்கம்) | | | |

29. ரொக்கத் தள்ளுபடி என்றால் என்ன?
30. கடன் நடவடிக்கை என்றால் என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. குறிப்பேட்டுப் பதிவுகளை விட துணையேடுகள் முக்கியமானதாகும். அவசியமானதும் ஆகும். ஏன்? விளக்குக.
32. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளை தருக.
    1) ரொக்க க/கு ப.
       முதல் ககு/C
    2. ரொக்க க/கு ப.
       வாடகை க/கு
    3) சம்பள க/கு ப.
       ரொக்க க/கு
33. கணக்குப் பதிவியலின் பொன்னான விதிகள் யாவை?
34. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்க பதிவினைத் தருக.
    ரொக்கம் ரூ.12,000, இயந்திரம் ரூ.60,000, அறைகலன் ரூ.6,000, கடனீந்தோர் ரூ.22,000, கடனாளிகள் ரூ.18,000, சரக்கிருப்பு ரூ.12,000
35. பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
    1) சங்கர் கொண்டு வந்த முதல் ரூ.50,000
    2) வங்கியில் போட்ட ரொக்கம் ரூ.12,000
    3) ரொக்கக் கொள்முதல் ரூ.18,000
36. பின்வரும் நடவடிக்கைகளை துணையேடுகளில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2017 ஜூலை | 1 | ராமனுக்கு விற்றது ரூ.8,000 |
| | 2 | சுந்தருக்கு ரொக்கத்திற்கு விற்றது ரூ.12,000 |
| | 10 | குமாருக்கு சரக்கு விற்றது ரூ.18,000 |
| | 20 | அறைகலன் விற்றது ரூ.6,000 |
| | 25 | சங்கருக்கு விற்றது ரூ.4,000 |

37. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

| | | |
|---|---|---|
| 2012 செப். | 1 | ரமேஷ் சொந்த செலவுகளுக்கு எடுத்தது ரூ.8,000 |
| | 2 | ரொக்க விற்பனை ரூ.20,000 |
| | 8 | ரொக்க கொள்முதல் ரூ.16,000 |

38. பின்வரும் நடவடிக்கைகளை துணை ஏடுகளில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2013 ஜுலை | 4 | சங்கர் திருப்பிய சரக்கு ரூ.6,000 |
| | 8 | ராமு திருப்பிய சரக்கு ரூ.8,000 |
| | 10 | சோமு திருப்பிய சரக்கு ரூ.4,000 |

39. கூட்டுப் பதிவுகள் தருக.

a) 28.2.2011 சம்பளம் செலுத்தியது ரூ.6,000
வாடகை செலுத்தியது ரூ.4,000

b) 31.3.2012 ராமு கொண்டு வந்த முதல் ரூ.10,000
சங்கர் கொண்டு வந்த முதல் ரூ.20,000

c) 31.3.2013 வட்டி பெற்றது ரூ.4,000
கழிவு பெற்றது ரூ.6,000

40. கணக்கியல் சமன்பாட்டின் படி விடுபட்ட தொகையைக் கணக்கிடுக.

| | *சொத்துக்கள்* | = | *பொறுப்புக்கள்* | + | *முதல்* |
|---|---|---|---|---|---|
| a) | 30,000 | = | 18,000 | + | |
| b) | | = | 8,000 | + | 12,000 |
| c) | 10,000 | = | | + | 6,000 |

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. கீழ்க்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் இருந்து குறிப்பேட்டு பதிவில் விடுபட்ட தொகையினையும் அதன் கணக்குகளையும் கண்டுபிடித்தும், முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

| | | |
|---|---|---|
| 1.1.12 | ......................... (தொழில் தொடங்கியது) | 1,80,000 |
| 4.1.12 | ......................... (ரொக்கக் கொள்முதலுக்காக) | 1,00,000 |
| 8.1.12 | ......................... (ரொக்க விற்பனைக்காக) | 60,000 |
| 10.1.12 | ......................... (சம்பளம் கொடுத்தது) | 4,000 |
| 20.1.12 | ......................... (இயந்திரம் வாங்கியது) | 6,000 |

**(அல்லது)**

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக:

1.4.10 ரொக்க விற்பனை ரூ.60,000
2.4.10 ரொக்கக் கொள்முதல் ரூ.40,000
3.4.10 வாடகை கொடுத்தது ரூ.12,000
4.4.10 சம்பளம் கொடுத்தது ரூ.6,000
5.4.10 கழிவு பெற்றது ரூ.16,000

42. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு சரியான குறிப்பேட்டு பதிவுகள் தருக.

a) வாடகை பெற்றது b) இயந்திரம் வாங்கியது c) கட்டிடம் வாங்கியது
d) தள்ளுபடி பெற்றது d) சங்கருக்கு கடன் விற்பனை செய்தது. **(அல்லது)**

தேவையென கருதும் இடத்தில் சரியான பதிவினைத் தருக.

a) முதல் கொண்டு வந்தது
முதல் க/கு ப.
ரொக்க க/கு

b) கொள்முதல் (ரொக்கம்)
ரொக்க க/கு ப.
கொள்முதல் க/கு

c) சங்கருக்குக் கொடுத்த ஊதியம்
சங்கர் க/கு ப.
ரொக்க க/கு

d) வாடகை கொடுத்தது
வாடகை க/கு ப.
ரொக்க க/கு

43. கணக்கியல் சமன்பாட்டைக் கணக்கிடுக.

a) பல்லவன் வியாபாரம் தொடங்கியது ரூ.70,000 b) அறைகலன் வாங்கியது ரூ.12,000
c) வாடகை கொடுத்தது ரூ.4,000 d) ராமிடம் கொள்முதல் செய்தது ரூ.40,000

(அல்லது)

கணக்கியல் சமன்பாட்டைக் காண்க.

a) ரம்யா தொழில் தொடங்கியது ரூ.60,000
b) கடன் கொள்முதல் ரூ.30,000
c) ரம்யா தன் சொந்த தேவைக்கு பணம் எடுத்தது ரூ.12,000

44. நேரடிப் பேரேடு தயாரிக்க.

| | | |
|---|---|---|
| 2013 அக். | 04 | சிவாவிடம் பெற்ற ரொக்கம் ரூ.40,000 |
| | 05 | ரொக்க விற்பனை ரூ.20,000 |
| | 07 | சம்பளம் கொடுத்தது ரூ.6,000 |
| | 10 | வாடகை கொடுத்தது ரூ.8,000 |

(அல்லது)

நேரடிப் பேரேடு தயாரிக்க.

| | | |
|---|---|---|
| 2013 செப். | 04 | ராம் கொணடு வந்த முதல் ரூ.80,000 |
| | 08 | ரொக்க விற்பனை ரூ.40,000 |
| | 10 | ரொக்கக் கொள்முதல் ரூ.12,000 |
| | 12 | கழிவு பெற்றது ரூ.6,000 |

45. பின்வரும் நடவடிக்கைகளை துணையேட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2004 மே | 8 | இராமனிடம் வாங்கிய சரக்கு ரூ.8,000 |
| | 10 | சங்கரிடம் பெற்ற சரக்கு ரூ.14,000 |
| | 18 | சேகரிடம் பெற்ற சரக்கு ரூ.18,000 |
| | 20 | ராமுவிடம் பெற்ற சரக்கு ரூ.12,000 |

(அல்லது)

| | | |
|---|---|---|
| 2005 மே | 4 | சுந்தருக்கு விற்ற சரக்கு ரூ.14,000 |
| | 8 | ராமுவுக்கு விற்ற சரக்கு ரூ.12,000 |
| | 9 | சுதாவிற்கு விற்ற சரக்கு ரூ.16,000 |
| | 14 | சங்கருக்கு விற்ற சரக்கு ரூ.10,000 |

46. உரிய துணையேட்டில் பதியவும்.

| | | |
|---|---|---|
| 2003 ஏப்ரல் | 03 | ரமேஷுக்கு சரக்கு விற்றது ரூ.1,000 |
| | 05 | குமாருக்கு சரக்கு விற்றது ரூ.2,200 |
| | 06 | சங்கருக்கு சரக்கு விற்றது ரூ.3,000 |
| | 10 | குழந்தைவேலுக்கு சரக்கு விற்றது ரூ.4,000 |

(அல்லது)

| | | |
|---|---|---|
| 2004 ஏப்ரல் | 10 | ராம் திருப்பிய சரக்கு ரூ.400 |
| | 12 | சங்கர் திருப்பிய சரக்கு ரூ.4,000 |
| | 13 | தீபா திருப்பிய சரக்கு ரூ.1,200 |
| | 18 | சுபா திருப்பிய சரக்கு ரூ.1,600 |

47. வியாபாரத் தள்ளுபடிக்கும், ரொக்கத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
மாற்றுச்சீட்டின் சிறப்பியல்புகள் யாவை?

*****